தொகுதி-௫௯ :: பகுதி-௯ — Vol. 59 :: No. ௯

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1994
சோபகிருது—மார்கழி
DECEMBER—1963

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 21—6—64)

உள்ளுறை

1. பொருளாதாரத்தின் தூண்கள் 193
வை. கா. சிவப்பிரகாசம்

2. தமிழ்க் காப்பிய வளர்ச்சி 198
வை. தட்சிணுமூர்த்தி

3. பரிபாடலின் காலம் 202
கோமதிசுப்பிரமணியம்

4. தூதனே அனுமன்? 208
தி. வேலவன்

5. தமிழர் வளர்த்த சிற்பக்கலை 213
அ. திருமலைமுத்துசுவாமி

6. மதுரைக் காண்டமும் மன்னவன் சிறப்பும் 218
மு. உலகநாதன்

7. தமிழ்ச்சங்கப் புலவர் தேர்வு முடிவுகள் 224

"செந்தமிழ்"

நிர்வாக ஆசிரியர்

தமிழவேள்

திரு. பி. டி. இராசன் B. A. Bar-at-law

ஞாயிறு மறைந்தது

இந்தியத் தலைமை அமைச்சர் பண்டிதர் நேருவின் மறைவு நாட்டிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். தாய்ப்பசுவினை இழந்த கன்றினைப்போல் நாடு இன்று தவிக்கிறது. அவர் விட்டுச்சென்ற பணிகள் பல, அவற்றை நல்லமுறையில் நிறைவேற்றி வைப்பதே இன்று நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறாகும். வாழ்க அவர் புகழ்.

ஆசிரியர்.

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ருக | திருவள்ளுவர் ஆண்டு 1994 | பகுதி 9
Vol. 59 | சோபகிருது — மார்கழி, | No. 9
1963 December

பொருளாதாரத்தின் தூண்கள்

[வை. கா. சிவப்பிரகாசம், காட்லிக் கல்லூரி, பருத்தித் துறை]

நாட்டின் வலிமை

மக்கள் வாழ்க்கை மேம்பாட்டின் அடிப்படை பொருள் வளமாகும். நாட்டின் உயர்விற்கும் இதுவே உயிர்நாடி. ஆகவே, பொருளாதார உயர்வே அரசின் தலையாய குறிக்கோளாயிருத்தல் வேண்டும். இத்தகைய பொருள்வளம் நாட்டின் வலிமையின் அறிகுறியென்றே கொள்ளப்படல் வேண்டும். அதனாலேயே 'வலியறிதல்' என்ற அதிகாரத்திற் 'பொருள் வலி'யைப் பற்றியும் வள்ளுவர் பேசுகிறார்.

பொருளாதாரத்தின் தூண்கள்

ஒரு நாட்டின் அரசு முடியாட்சியாய்த் திகழலாம்; குடியாட்சியாய் அமைந்திருக்கலாம்; தடியாட்சியாயும் இருக்கலாம். ஆனால், பொருளாதார வளர்ச்சியைக் கடமையாகவும் குறிக்கோளாகவும் பூணும் எவ்வரசும் ஏற்கவேண்டிய பொருளாதாரக் கொள்கைகளை வள்ளுவர் சீரியமுறையில் வகுத்துள்ளார். பொருளாதாரத்தின் தூண்கள் என்று போற்றவேண்டிய ஐந்து கொள்கைகளை வள்ளுவர்,

> "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்லது அரசு" (385)

என்ற குறளில் அழகாகத் தொகுத்துள்ளார்.

பொருள் வழிகளைப் பெருக்கல், வருவாயைத் தொகுத்தல், தொகுத்தவற்றைப் பிறர்கொள்ளாமற் காத்தல், நாட்டிற் பலதுறை வளர்ச்சிக்கும் காத்த பொருளைப் பகுத்தல், என்ற ஐந்தும் பொருளாதாரத் துறையில் நாடு முன்னேறுவதற்கு உறுதுணை புரியும் கொள்கைகள் என்பதில் ஐயமில்லை. இவற்றைப் பொருளாதாரத்தின் தூண்கள் என்று கருதுதல் பொருத்தமேயாகும்.

இயற்றல்

இயற்றல் என்பது தனக்குப் பொருட்கள் வரும் வழிகளை மேன்மேலும் உளவாக்கல் என்று பரிமேலழகர் விளக்குகிறார். அன்றியும், ''வாயில்களாவன = மேல் இறைமாட்சியுள் 'இயற்றலும்' என்புழி உரைத்தனவும், உழவு, பசுக்காவல், வாணிகம் என்னும் வார்த்தையுமாம் என்றும், ''பொருள்களாவன: மணி, பொன், நெல் முதலியன. அவை வரும் வழிகளாவன: பகைவரை யழித்தலும் திறைகோடலும் தன்நாடு தலையளித்தலும் முதலாயின'' என்றும் பரிமேலழகர் விளக்கம் தருகிறார் பரிமேலழகர் தரும் விளக்கம் பழந்தமிழ்நாட்டு முடியரசிற்குப் பொருந்துவதாயுள்ளது. எனினும் வள்ளுவர் வகுத்த கொள்கைகள் பெரிதும் பொதுமை நெறியினவாதல் கூர்ந்து நோக்கின் புலனாகும்

பொருட்கள்வரும் வாயில்களை வள்ளுவர் 'வாரி'[1] என்ற சொல்லில் அடக்கியுள்ளார். இத்தகைய பொருள்வரு வழிகளையும் அவற்றால் வரும் பொருட்களையும் விளக்கும் வள்ளுவர் உறுபொருள், உல்குபொருள், ஒன்னார்த்தெறுபொருள்[2]

---

1. ''வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை'' (512)

2. ''உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்'' (756)

தள்ளாவிளையுள்[3], இறை[4] என்பவற்றைச் சிறப்பாக எடுத்துரைக்கிறார். ஆகவே நாட்டின் பொருளாதாரத்தின் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொள்ளும் அரசு வருவாயைத் தரக்கூடிய உள்நாட்டுப் பிறநாட்டு வழிகளைப் பெருக்கல் வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்தல் புலனாகும்.

ஈட்டல்

உள்நாட்டு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கும் பொருட்களை நுகர்ச்சியாளர்கள்(Consumers)எளிதிற் பெறவேண்டுமாயின் அவை யாவும் தக்க முறையில் ஒருங்கு திரட்டப்பட வேண்டும், அரசாங்கக் கட்டுப்பாடுகளும் மேற்பார்வையும் அவ்வாறு திரட்டுதற்கு இருத்தல் வேண்டும். இத்தத்துவத்தையே (ஈட்டல்) என்ற பொருளாழமுள்ள சொல்லில் வள்ளுவர் குறிப்பிடுகிறார். நடைமுறையில் இத்தத்துவம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதைக் குறள் புள்ளிவிவரங்களோடு கூறவில்லை. அவ்வாறு எதிர்பார்த்தலுமாகாது. ஆனால் சங்க இலக்கியங்கள் போதுமான விளக்கந் தருகின்றன. பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை குறிஞ்சிப்பாட்டு போன்ற பழம் பாடல்கள் சான்றுகள் தருகின்றன. பட்டினப்பாலையில் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் காவிரிப்பூம் பட்டினத் துறைமுகத்தை யடுத்துள்ள பண்டசாலையில் குவிக்கபட்டமை, உல்குவரி ஒழுங்காகச் செலுத்தப்படுதலைக் கண்காணிக்கும் அதிகாரிகள் கடமையாற்றியமை போன்ற செய்திகள் கூறப்பட்டுள்ளன.

---

3. ''தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு'' (731)

''பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து'' (738)

4. ''பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கியிறைவற்
கிறை யொருங்கு நேர்வது நாடு'' (738)

காத்தல்

பொருள் வளத்திற்குரிய அடுத்த தத்துவம்பாதுகாப்பு ஆகும். உற்பத்தி செய்யப்பட்ட பொருளைப் பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலியோர் கவராது பாதுகாத்தல் அரசன் கடமையாகும். பகைவர் உரியபணம் கொடுக்காது பொருளைக் கவர்ந்து சென்றால் நாடுநலியும், ஆகவே எல்லைப்புறங்கள் துறைமுகங்களில் அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேறும் பிறநாட்டாரைப் பரிசோதிக்க வேண்டும். கள்வரிடமிருந்தும் பொருளைக்காத்தல்வேண்டும் சுங்கக்காவலர்கள், ஊர்காவலர்கள் கடமைகளில்இத்தகைய பாதுகாப்பு அளித்தலும் அடங்கியிருந்ததாகச் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. மேலும் அரசன் உறவினர் செல்வாக்கு, அதிகாரங்களைக் காட்டி அச்சுறுத்திப் பொருளைக் கவர்தல்கூடும், உற்பத்தியைப் பாதிக்கும் வகையிலும் தலையிடலாம். இவைமிகப்பெரிய கேடுகளாகும் அவ்வாறே தொழில் புரிவோர் ஊழல் மலிந்தோராய் நாட்டின் பொருள்நிலை நலிவடையச் செய்யலாம். இத்தகைய குறைகளை நீக்கும் வகையில் (காத்தல்) அமைதல் வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. கூர்ந்து நோக்கும் வகையில் நுட்பமாக வள்ளுவர் பொருட்பாலிற் பல அதிகாரங்களிற் கூறிய கருத்துக்களை இணைத்து ஆராய்ந்தால் வள்ளுவர் கருத்துப் புலனாகும்.

வகுத்தல்

இயற்றி, ஈட்டி, காத்த பொருளைப் பலதுறைவளர்ச்சிக்கும் அரசு பகுத்தளிக்கவேண்டும். பரிமேலழகர் பழைய கால நிலைக்கிணங்க அறம், பொருள், இன்பங்கட்குப் பகுத்தல் வேண்டுமென்கிறார். ஆனால் வள்ளுவர் பொதுமையின் மாண்பை உணர்ந்தால் இன்றைய நிலைக்கும் அத்தத்துவம் பொருந்துவதைக் காணலாம். கல்வி, உடனலம், பாதுகாப்பு, சமுதாயநலத் தொண்டு, போக்கு வரவு போன்ற

பலதுறை வளர்ச்சிக்கும் பகுத்தல் நலம் என்று கொள்ள லாமன்றோ.

மேலும் பொருள்வளத்தின் பயனைச் சமுதாயத்தி லுள்ள ஒருபகுதியினர் மட்டும் அனுபவிக்கஇடங்கொடாது எல்லாப்பகுதியினரும் உய்யும்படி பகிர்ந்தளித்தல் வேண்டு மென்ற கருத்தையும் வள்ளுவர் குறிப்பாக உணர்த்து கிறார் போலும். செல்வர்க்கும் ஏழைகட்கும் உள்ள ஏற்றத் தாழ்வை யகற்றி எல்லாரும் எல்லாச் செல்வமுமடைய வழி காணலே அவர் கருத்து என்று கூறலாம். இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் இறைவனே பரந்து கெடவேண்டு மென்றும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல் நூலோர் கொள் கைகளில் முதன்மையான தென்றும் கூறும் வள்ளுவர் 'வகுத்தல்' என்றசொல்லில் அத்தகைய பொருளாதாரக் கோட்பாட்டை வலியுறுத்துகிறார் என்று சொல்ல இட முண்டன்றோ!

'வல்லது: நிர்வாகம்'

இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் யாவற்றிற்கும் இணைப்புப்பலமான தாயிருக்க வேண்டுமாயின் சிறந்த நிர் வாகம் இருத்தல் வேண்டும். சிறந்த நிர்வாகமில்லாவிடின் உற்பத்திப் பெருக்கத்தின் பயனை மக்கள் அடைய முடியவே முடியாது. தெரிவுமுறை, வேலை செய்விக்கும் பான்மை, மேற்பார்வை ஆகிய நிர்வாக நுட்பங்களை யெல்லாம் தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினை யாடல் போன்ற அதிகாரங்களில் வள்ளுவர் பரக்கப்பேசு கிறார்.

ஆகவே, தொகுத்து நோக்குமிடத்து, உற்பத்திமூலப் பெருக்கம், தொகுப்பு, காப்பு, பங்கீடு, சிறந்த நிர்வாகம் ஆகிய ஐந்துமே சமுதாயநலம் பேணும் நல்ல நாட்டின் பொருளாதாரத் தூண்கள் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெள்ளிதின் புலனாகும்.

தமிழில் காப்பிய வளர்ச்சி

வை. தட்சிணாமூர்த்தி, எம். ஏ.
ஸ்ரீ ர ங் க ம்.

(192–ஆம் பக்கத் தொடர்ச்சி)

காப்பியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்:—

செய்யுள் வகைகளும், சிந்தாமணியிற் போல மிகப் பலவாயுள்ளன. இதிலும் மகளிர் வருணனைகளும், பிற சிற்றின்ப வருணனைகளும் சற்று மிகைப்படினும் காப்பியக் கலை அங்கங்கே மிளிர்கின்றது சமண காவியமான இதன் கதை பயாபதி, விசயன் என்ற இருவர் மோட்சம் அடைந்த வரலாறே

உதயணன் கதை

உதயண குமார காவியம் என்னும் உதயணன் கதை குண்டலகேசியைப் போன்றே சிறப்பற்ற நூல் என்பர். யசோதரகாவியம், நாககுமார காவியம் போன்றவற்றைக் குறிப்பிடச் சிறப்பேதுமில்லை.

பிற்காலக் காப்பியங்கள்

கம்பராமாயணம் கம்பநாடர் வான்மீகராமாயணத்தைத் தழுவிக் கம்ப ராமாயணம் இயற்றுவதற்கு முன்னரே சங்க காலத்தில் பல இராமாயணங்கள் தமிழில் வழங்கிஇருக்க வேண்டும். இராம சரிதம் என்ற பெயரால் யாப்பருங் கல விருத்தியுரையில் ஒரு இராமாயணம் கூறப்படுகிறது. கம்ப ராமாயணம் வான்மீகரைத் தழுவியதெனினும், ஒரு தனி முதல் நூல் போன்றே திகழ்கின்றது. தமிழ்க் காப்பிய வானில் கதிரவன் போன்று தோன்றிப் பிற காப்பியங்களை யெல்லாம் மங்கவைத்த சிறப்பு கம்பராமாயணத்துக்கு உண்டு. இதுகாறும் அதை மிக்கதும் ஒப்பதுமாய் ஒருநூல்

வெளிவரவில்லை என்பது அறிஞர் துணிபு. பாடலில் எண்ணிறந்த சந்தங்கள், சொற்பெருக்கு, நாடகத்தன்மை இன்னேரன்ன அணிநலன்களோடு அகலவியல்பு பெற்று விளங்குவது இராமாயணம். வருணனை நயத்திலும், கொள்கைவழி வரலாறு கூறும் கட்டுக்கோப்புத் தன்மையிலும், பிற ஒன்பான் சுவைகளை வெளிக்காட்டும் மரபிலும் கம்பராமாயணம் மிகச் சிறந்து விளங்குகிறது. கம்பர் நினைத்ததெற்கெல்லாம் படலம் பாடும் ஆற்றல் மிக்கவர். வான்மீகத்தில் இல்லாத தனிச்சிறப்புக்கள் கம்பரிடத்தில் உண்டு. தமிழில் இயற்றப்பட்ட பிறமொழி பெயர்ப்பு நூற்களுள் நடைச்சிறப்பாலும், கதைச் சிறப்பாலும் தமிழர் உள்ளத்தைக் கவர்ந்த காப்பியம் இது வன்றி வேறில்லை. கம்பன் கண்ட இராமன் தமிழ் நாட்டவனாகவே தோன்றுகிறான். கங்கை காவிரியாகவே நிற்கிறது. காப்பியக்கலை வளர்ச்சியின் உச்சநிலை கம்பராமாயணமே எனில் மிகையாகாது.

பெரிய புராணம்

சைவ, சமய நாயன்மார்களின் வரலாறுகளைத் தனித் தனியே கூறும் நூல் சேக்கிழார் அடிகள் இயற்றிய பெரிய புராணம். தனியடியார்கள், தொகை அடியார்கள் போன்றோரின் வரலாறுகளைத் தனித் தனியே சுவைபட ஆசிரியர் கூறிச்செல்கிறார் எனினும் காப்பியத்திற்குரிய ஒரே தலைவன் என்ற நிலையை இதில் காணமுடியாது. சொற்சுவையும் பொருட் சுவையும் மிக்கது இந்நூல் எனினும் காப்பியத்துக்குரிய கட்டுக்கோப்பு இல்லை. கதையைக் கூறும் முகத்தில் காப்பிய நெறியைக் காணுகிறோம். கம்பராமாயணத்தில், கம்பர் எச்சமயத்தினர் என்றுகூறுதற்குக் காப்பியத்தால் முடியாததாய் நிற்க. பெரிய புராணம் சேக்கிழார் சைவர் என்பதை எளிதிற் காட்டிவிடுகிறது. பெரியோர் இதனைக் காப்பியம் என்பதில்லை.

காப்பியக் கலையில் வீழ்ச்சி

கம்பராமாயணத்தை அடுத்துத் தோன்றிய எந்த நூலும் இதுவரை காப்பியத் தகுதியைப் பெறவில்லை. அதிவீரராமபாண்டியர் வியாசரைத் தழுவி பாரதக்கதையுள் ஒன்றானநளன் வரலாற்றை நைடதமாக்குகிறார். வில்லிபுத்தூராரின்பாரதம் எழுந்தது. பிற்காலத்தில் இஸ்லாமியரான உமறுப்புலவர் சீறாப்புராணம் இயற்றினார். வீரமாமுனிவரின் தேம்பாவணி வந்தது. இவையனைத்தும் தனித்தன்மைகளால் சிறப்பிப்பதற்குத் தக்கனவாக அமைகின்றனவே யன்றிக் காப்பியம் என்ற தகுதிக்கு ஒப்பனவாயில்லை. கம்பநாடரொடு காப்பியக்கலை வீழ்ச்சியுற்றது. அதற்குப் புத்துயிர் அளிக்க வேண்டியது இற்றைத் தமிழர் கடமை.

வளர்ச்சியின் அடியும் முடியும்:

இதுகாறும் நமக்குக் கிடைக்கும் காப்பியங்களில் ஆலமரத்தின் அடியாகவும், முடியாகவும் திண்மை பெற்று விளங்குவன இருகாப்பியங்கள். காப்பியக்கலையின் வித்தினை அறிய முடியுமளவிற்கு வேர் இதுகாறும் நமக்குக் காணக் கிடைக்கவில்லை. எத்தனையோ காப்பியங்கள் உரையாசிரியர்களால் எடுத்தாளப்படுகின்றன. முழுமையும் கிடைக்கவில்லை. தமிழ்க் காப்பியக் கலையின் அடி சிலப்பதிகாரம் எனின் முடி கம்பராமாயணம் என்பதில் நமக்கு ஐயம்எழ வாய்ப்பில்லை. சங்கப்பாக்களில் வித்துக்கள் உள. ஆசிரியப்பாவில் எழுந்தது சிலம்பு. விருத்தப்பாவில் முடிந்தது கம்பராமாயணம். சொல்லணிகள் இன்றிக் கட்டுக்கோப்பால் வேகமூட்டியது சிலம்பு, இண்டாலும் உணர்ச்சி பயப்பது இராமாயணம். பொருளில் கற்பனைக் கலப்புக்கு மிகுதியாக இடமின்றி போதிய வருணனைகளோடு வந்தது சிலம்பு. கற்பனைக் கடலாகப் படலங்கள் வரைந்த பெருமையோடு நிற்கிறது இராமாயணம் நாடகக் காப்பியமாக மிளிர்வது சிலம்பு. நாடகங்களின்

கோவையாகப் படலந்தோறும் நாடகமாகக் காட்சியளிப்பது இராமாயணம். இடையே சிந்தாமணி, சூளாமணி போன்றனவும் காப்பியக்கலை மரத்தின் தண்டின் பகுதிகளாகச் சுவைபயந்தன.

எதிர்காலக் காப்பியங்கள்:

சமயவெறி, சௌராணிக எண்ணம், அமைதியின்மை, போட்டி மனப்பான்மை போன்ற காரணங்களால் பிற்காலத்தில் எழுந்த காப்பியங்களும் சுவையிற் குறைந்தன. இன்றைய நிலையில்மக்கள் பெருங்காப்பியங்களைச் சுவைக்குமளவுக்கு அவர்கட்கு ஓய்வு கிடைப்பது அரிது. உரையாசிரியர் துணையின்றி எளிய நடையில் இனிமை பயப்பனவாகப் பழையனவற்றில் புதுமைகண்டு வழி, வழி நெறி பற்றித் தமிழ்ச் சிறுகாப்பியங்களின் எழிழ்

"இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை"

என்ற மகாகவி பாரதியாரின் வாக்குப்படி மெய்ப்படும் நாளே காப்பிய வளர்ச்சியுறும் பெருநாள்.

பரிபாடலின் காலம்

திருமதி கோமதி சுப்பிரமணியம்,
அமைந்தகரை, சென்னை-29.

பரிபாடல், பொதுவாகச் சங்க இலக்கியங்களில் ஒன்ருகவே விளங்குகிறது. பரிபாடலின் காலத்தை அறிய முயன்றவர்கள் பலராவர். அவர்களுள் திரு. சோமசுந்தர தேசிகர், திரு. நாராயணசாமி அய்யர், திரு. சாமிக்கண்ணு பிள்ளை முதலியோர் குறிப்பிடத் தக்கவராவர். இவர்கள் பரிபாடலின் காலத்தைக் கணிக்கத் துணையாக விளங்கும் பரிபாடலின் அடிகள் வருமாறு:—

"விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
எரிசடை எழில்வேழம் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் ரொன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவந்து ஏற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்ப பொருள்தெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்
அங்கி உயர்நிற்ப அந்தணன் பங்குவின்
இல்லத் துணைக்கு உப்பால் எய்த இறையமன்

வில்லிற் கடைமகரம் மேலப் பாம்புஒல்லை
மதியம் மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுனம் அடைய விரிகதிர் வேனில்
எதிர்வரவு மாரி இயைகென இவ்வாற்றால்
புரைகெழு சையம் பொழிமழை தாழ
நெரிதரூஉம் வையைப் புனல்'' (—பரி. 11: 1—15)

திரு. மு. ஆபிரகாம் பண்டிதர் தமது கருணாமிர்த சாகரம் என்னும் இசைத்தமிழ் நூலில், பழந்தமிழர் வான நூற்பயிற்சியில் சிறந்து விளங்கினர் என்பதற்கு நல்லந்துவனார் பாடிய மேற்கண்ட அடிகளையே குறித்துள்ளார். இப் பாடற்பகுதி பற்றி, திரு. கு. அருணாசலக்கவுண்டர் அவர்கள் தரும் செய்தி:—

"இடபவீதி, மிதுனவீதி, மேடவீதி என்று வகுக்கப் பட்ட மூவகை வீதியிலே அடங்கிய இருபத்தேழுநாள்களுள் வெள்ளி இடபத்தைச் சேர, செவ்வாய் மேடத்தைச் சேர, புதன் மிதுனத்திலே நிற்க, கார்த்திகை உச்சமாகி விடிதல் உண்டாக, குரு மீனத்திலே நிற்க, இராகு மதியம் மறையும் படி வருகிற நாளிலே, அகத்தியன் என்ற மீன் உயர்ந்த தன்னிடத்தை விட்டு, மிதுனத்தைப் பொருந்த, முறுகின வெயிலையுடைய முதுவேனிற்குப்பின், கார் காலத்து மழை பெய்க என்ற விதிப்படி உயர்ந்த சையமலையிலே, மழை பெய்ய, மிகுதியாக வருகின்ற வையைப்புனல்.''

ஆவணிமாதம் அவிட்டநாள் சந்திரகிரகணத்தை இதில் அடக்கிய கோள்நிலை குறிக்கிறது. இக்கிரக நிலைக்கேற்ற இராசிச் சக்கரம் வருமாறு;—

வியாழம்	செவ்வாய்	வெள்ளி	புதன் அகத்தியன்
			கேது
சனி மதி ராகு			ஆதித்தன்

1. திரு. நாராயண அய்யர் இக்கோள்நிலையின் காலம் கி. பி. 372 ஆடி 15 என்பர்.

2. திரு. சோமசுந்தரதேசிகர் அவர்கள் கி. மு. 161 ஆன கலி 2941-பிரமாதி ஆவணி. வியாழன், சதுர்த்தசி 15-4; அவிட்டம் 45-33 என்பார்.

3. திரு. எல். டி. சாமிக்கண்ணுபிள்ளை அவர்களின் முடிவு:-

ஆண்டு	சந்திரகிரகணம் வந்த மாதம்	சௌரமான நாட்கள்	செவ்வாய்	குரு	சனி
கி. பி. 17	சிராவணம்	139	14	156	208
,, 634.	ஆஷாடம்	128	31	161	187
,, 694	ஆவிசுனம்	114	335	181	200
,, 871	பாத்ரபதம்	135	54	153	203
,, 931	கிரகணமில்லை	131	358	173	216
,, 1050	சிராவணம்	134	95	185	230
கி. மு. 160	சிராவணம்	...	25	176	156
,, 220	மே மாதம்	...	349	196	168
,, 397	மே மாதம்	...	28	168	171
,, 1572	கிரகணமில்லை	...	289	186	128

உரையாசிரியர் கருத்துப்படி, சந்திரகிரகணம் வந்த தென்பதைக் குறிப்பாகக் கொண்டு கி. பி. வருடங்களைச் சோதிப்போமானால் கி. பி. 17. (வர்த்தமான-கலி. 3119) ஒன்றே பரிபாடற் காலத்திற்கு ஒத்துக் காணப்படும்.

கி. மு. 161 சிராவண மாதத்தில் கிரகணம் இருந்திருக்கிறது. ஆனால் அங்காரகனுடைய மத்தியத்தைக் கவனிக்கும்பேது, அதன் சுத்தஸ்புடன் மேஷத்தில் இராதென்பது நன்கு புலப்படும். மற்றைய கி. மு. வருடங்களில் கிரகணங்கள் இல்லாமையால் அவற்றைப்பற்றி ஆராய்வதில் பயனில்லை.

டாக்டர் ஹில்ஷால் என்பவர் சங்கநூல்கள் கி.பி. 8ஆம் நூற்ருண்டைச் சார்ந்தன என்று கூறுதலானும், கி. பி.

7-ஆம் நூற்றூண்டிற்கு முன்னர் தென்னிந்திய மக்கள் சாதகங்களைக் குறிக்கவில்லை யாதலாலும், சந்திரகிரகணத்தை உறுதியாகக் கொண்டபடியாலும், அக்கோள்நிலையின் காலம் 17-6-634 ஆகத்தான் இருத்தல் வேண்டும். ஆகவே, பரிபாடலின் காலம் கி. பி. 634-ஆம் ஆண்டே.

4. திரு. வெ. கனகசபைப்பிள்ளை அவர்கள், பரிபாடலின் காலத்தைக் கி. பி. முதல் நூற்றூண்டு என்பர்.

5. திரு. அ. குமாரசாமி அவர்கள், பரிபாடலின்காலம் கி. பி. நூற்றூண்டே என்பதில் ஐயமில்லை என்கிறூர்.

முடிவாக ஆராயுமிடத்து பரிபாடலின் காலம் கி. பி. 7-ஆம் நூற்றூண்டாகவே இருக்கமுடியும். ஏனைய எந்த சங்க இலக்கியங்களிலும் இல்லாத புராணக்கருத்துக்களும் ஆரியர் குறிப்புக்களும் பரிபாடலில்தான் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆகவே ஏனைய சங்க இலக்கியங்களுக்குப் பரிபாடல் சில நூற்றூண்டுகளேனும் பிந்தியதாகவே இருக்கமுடியும். பரிபாடலில் காணப்படும் மக்கள் வாழ்க்கையை நோக்க, கி. பி. எட்டாம் நூற்றூண்டிற்கு முற்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். எனவே திரு. எல். டி. சாமிக்கண்ணுபிள்ளை அவர்கள் கூற்றுப்படி பரிபாடலின் காலம் கி. பி. ஏழாம் நூற்றூண்டாகவே இருத்தற்கு இயலும்.

தூதனே அனுமன்?

(184-ம் பக்கத் தொடர்ச்சி)

தி. வேலவன்,

தமிழ் ஆய்வுத்துறை,

கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

அறிவு

இன்னலின் முடிவு காணுது இயக்கருள்ளிருந்து நைந்து, தன் உயிர் போக்கி உய்ய முயன்ற நாயகன் தேவியைக் காக்கவேண்டும்; மெய்தொட்டுத் தடுக்கவேண்டும்: அவன் மெய் துணுக்குற்றது: அவன் மேனி தூண்டக் கூசினுன். என் செய்வது? காக்க வேறு வழியில்லையே! அவள் முன் ஓடினன். 'அண்டர் நாயகன் அருட்டூதன் யான்'எனத் தொழுதனன்.

சீதையின் ஐயுறவு உணர்ந்து நினையல்வேறு அயலென்ருன். தான் வந்த வரலாறும், இராமன் தன் வடிவும் கூறினன். நொந்தவள் சிந்தை மகிழ்ந்தது. மகிழுமன்னவர்க்குத் தான் சொலும் வாசகம் கேட்டனன்; இலங்கை நகரும் மக்களும் பிறவும் அழியும் ஆறு கூறி அகமகிழ விடுத்து அகன்றனன்.

அனுமன் வரவெண்ணி அலமந்து இராமன் சுற்றம். சீதையை நாடிய இராமனின் உள்ளம் உலேந்து கிடந்தது. அனுமன் வந்தனன். சேதி கேட்க யாவரும் விழைந்தனர். கண்டதையெல்லாம் யாங்கன் கூறுவன்? அவர் கருத்து கொள்ள எதனை உணர்த்துவன்? அடியஞன அனுமன் எவ்வாறுணர்த்துவன்? இவன் இருக்கும் திசைநோக்கி வணங்கினன். 'தையலை நோக்கிய தலையன் கையினன் வையகந்தழீஇ நெடி திறைஞ்சி வைகினுன்'. அக்குறிப்பால்

'வண்டுறை ஓதியும் வலியன் மற்றிவன் கண்டதுமுண்ட வள் கற்பு நன்றெனக் கொண்டனன் குறிப்பினுலுணருங் கொள்கையான்'.

இவை அனுமன் பிறர் உணர்வெண்ணி. பொழு தெண்ணிக் கூற வல்லவன் என்பதைச் சாற்றும். இதனைக் கருதியே புலவனும் அனுமனை அறிவை ஒத்தவன் என்ருர்.

நினைவும் செயலும்

எண்ணம் வினையாக முகிழ்க்கும். எண்ணம் சீரிய தா யும் அமையக் கூடும். இவ்வெண்ணமும் உள்ளத்து அனை யது. ஒருவன் பண்பும், பயிற்சியும் அறிவும் நோக்கமும் பிறவும் எண்ணத்தின் அடிப்படையாகும். ஆகலின் சீரிய பண்புடையார் மாட்டுச்சிறந்த எண்ணம் எழல் இயல்பு.

அனுமன் அறிவும், ஆற்றலும், உணர்வும் மிக்கவன். அவன் செயல்களெல்லாம் கம்பனல் போற்றப்படுகின்றன. சீதையைத் தேடிவந்த அனுமன் தன் தகுதிக் கேற்ப கட னுற்றல் சாலும். ஆயின், சீதையைக்காண விழைந்த அவன் நெஞ்சத்தில் வேறு உணர்வுகளும் படரக் கண்டோம்.

சூதால் அரக்கரை அழிக்க எண்ணுகின்றனன், மீழ வேண்டியபோழ்து. அவன் சூது ஓரளவு வெல்கின்றது. அவன் நோக்கம் அதுவாக, கொள்வினை இயற்ருது அயல் எண்ணல் பிழையெனக் கொண்டுரைத்த அவனே பின்பு வனமழித்து. நகரழித்து வலிய பாணத்தால் கட்டுண்டு வல்லரக்கர் அவை புகுகின்றனன்.

சீதையை நினைந்து வந்த தூதன் வேறு செயல்களிலும் ஈடுபடுகின்றனன் அவன் உணர்வு வழிப்படுபவன். அன்றி யும் அவனை அறியாது நெஞ்சம் அழிவு செய்ய விழைந்தது.

சிக்கல்

வலிய பாணத்தால் பிணிப்புண்டு அரக்கர் புடைசூழச் செல்பவன், இராக்கதன் அவை சென்று அவன் சுற்றமும் பெற்றியும் வல்லவன் நிலைமையும் மனமும் அறியலாம் எனக்கருதினன். 'நீதியும் மனங்கொள நிறுவி நின்றவும், பாதியின் மேற்செல நூறிப் பையப் போதலே கருமம்' என்று கருதினன். இராவணன் அவைபுக்க போழ்தும் உணர்வுச் சூழலில் சிக்கிபற்பல எண்ணுகின்றனன். அமர்த் தொழில் அழகன்று அருந்தூதனுந் தன்மை தூய்தென்று பின்பு உன்னினன். இராவணனைக் கண்டுகூற இராமன் யாதும் சொல்லினன் அல்லன். ஆயினும், யாவன் நீ எனக் கேட்ட இராவணன் முன், இராகவன் தூதன் தான் எனச் சாற்றினன். எனினும் தூதனே அவன்? விழைவும் செயலும் அவனைத் தூதன் எனக் கொள்ள விடுக்குமோ? சீதையைத் தேடி வந்தனனே அன்றித் தூது உரைக்க வந்திலன் அவன். பின் இறுத்த விடை ஏற்புடையதாகுமோ? ஏற்காத ஒன்றை இயம்பினது ஏன்?

சொல்லும் செயலும்

'சொல்வன்மை சாலப்படைத்த அனுமனை இரும்புரத்தினுட்டருந் தூது புகுந்த பின் அரக்கரைக் கொன்றதனைத் துரையாய்' என விளிக்கின்றனன் தென்னவன்கோன்.

''காட்டுவாரின்மையாற் கடிகாவினை
வாட்டினேன் என்னைக் கொல்ல வந்தார்களை
வீட்டினேன் பின்னு மென்மையினால் உந்தன்
மாட்டு வந்தது காணும் மதியினால்''—

இது அனுமன் விடை.

ஒலி எழுப்பி வருமரக்கர் உயிரளிக்கக் கருதி பொழிலிறுத்தனன். அது சூது. இவன் முன்னிய வினையும் அது. இறுத்த விடையோ வேறு!

திரிபு

மதியால் வலங்கொள்ளும் அனுமன் உள்ளத்தில் சிக்கல் தோன்றியது போலும். அரக்கரை அழிக்க எண்ணினன். அரக்கரால் பிணிக்கப்படுவோம் என்பதைக் கருதியிலன். எண்ணுது இயன்றவினை அவனைப்பிணித்தது. அவன் சொல்லும் பிறழ்ந்தது. தூதன் யான் என்றனன்.

தூது வந்தவனல்லன் அவன். வந்த வினை சாற்ருது திரித்து மொழிகின்றனன். அவன் மொழி திரிந்தது ஏன்? உள்ளம் உறுத்தியது என்ன? செயல்; அறிவு வழிப்படாத செயல். முன்பு கொள்வினைவிடுத்து பிறவினை கொள்ள மறுத்தது அவன் புலம். பின்பு உணர்வு வழிப்பட்டு,—அந்நினைவில் பொழிலிறுத்தனன், அறிவும் உயிர்ப்பற்றும் பிணித்தது. முன்னுணர்வு முகிழ்க்க, தன் பிழை புலப்பட்டது. அறிவும் உணர்வும் போட்டியிட்டன: அலமந்தான்.

அரக்கர் தன்னை அழிப்பர் எனும் அச்சம் படர்ந்திருத்தல் வேண்டும். பிழை பட்ட நெஞ்சம் உய்யுவழி நாடி தூதனுய் உரைப்பது சிறப்பெனக்கருதி, அரக்கர் அறிவும் ஆண்மையும் பெருமிதமும் அறிந்தமையால், உயிர் காக்கத் தூதன் எனக் கூறினன். அவன் கூர்த்த அறிவை அது புலப்படுத்தும். மெய் வெகுண்ட இராவணனைத் தணிக்க வீடணனைத் தூண்டியது அவன் உரை. 'தூது வந்தனென் என்ற பின்பும் கொல்லியோ' என வீடணன் அறிவின் எல்லோனை வினவினன். தூதரைக் கொன்றவர் யாவரும்

இலர்: அது நகை தருவது; இழுக்கு, எனச் சாற்றினன். பின்பு, தன் தங்கையின் ஆக்கரிய மூக்கை நீக்கிய சேதி கூறினன்.

அனுமனே அவர் அவை நீங்கி நகர் நீங்கும் போதும் நகருக்குத் தீயிட்டுச் செல்கின்றனன். தூது சொன்னவன் செய்தது அது. வாலில் அரக்கர் வைத்த தீயன்றே அவரைச் சுட்டது, எனும் வினா எழுதல் இயல்பு. அவர் அத்தீயை ஏன் கொழுத்தினர்? அனலெனக் கனலும் கண்ணனின் அருந்தங்கைக்கு இராமன் இளவல் செய்ததை எண்ணியே இவனுக்கும் சூடிட்டு அனுப்ப வாலில் இட்டனர் நெருப்பு.

தூதனே? சேவகனே?

ஊழியோர் பகலாய் ஓதும் ஆண்டெலா மூலகமேழும் ஏழும்வீ வுற்ற ஞான்றும் இன்றென இருத்தியன்றே எனச் சிதையின் வாழ்த்தும் அளவிலா ஆற்றலும் பெற்ற அவன் அவ்வாறு கூறாது இருக்கலாம். அவன் வன்மையைப் பிறை வாட்டியிருக்கும்; நெஞ்சம் அஞ்சி இருக்கும், ஆகலின், அஞ்சி மொழிந்தவன் என்னலாகுமா? மந்திரம் பலவும் வல்லவன், தன் வினை மறந்தனன். தான் தவிர்த்த வினையையே பின்பு ஆற்றற்குரிய செயலெனக் கொண்டனன். நிலை திரிந்து அஞ்சினன்.

வள்ளுவர் கூறும் தூதரைப்பான் பண்புகளை அனுமனிடம் காண இயலும். ஆயினும் அவன் செயல் முழுதும் ஒப்புதற்கியையவில்லை.

இராவணன் சுற்றத்தைக் கம்பன் கொடுஞ் சுற்றம் என்றே சுட்டுவன். அவர் அழிவில் கம்பன் நிறைவு காண்கின்றனன். அனுமன் செயலனைத்துக்கும் அவன் இசைவு கொடுக்கின்றான்.

நாடகப் பண்பு மிகுந்த இக்காதையுள் உறுப்பினர் சொல்லும் செயலும் அவர் பண்பு விளக்கல் தகுதி. சிக்கல் மிகும் இடங்களில் புலவன் முன் வந்து தெளிவு படுத்தல் இயல்பு, மற்று புலவன் சாற்றும் அடைமொழிகளுக்கு அரண் கட்ட முயல்வது ஏற்புடையது ஆகாது. உறுப்பினர் மொழியும் செயலுமே பண்பு புலப்படுத்த கொள்ள வேண்டுவன.

அனுமன் செயல் திரிந்தது; உள்ளம் உறுத்தியது. கொண்டது முடிக்கத்தன்னை யாங்கணமேனும் காக்க விழைந்து மொழி திரித்தனன், தன்னைத் தூதன் எனச் சாற்றினன்; இலனுயின் சாவு சூழும், சாற்றியதால், சாவு அகன்றது; பண்பு பழுதுற்றது.

சீதையைத் தேடி வந்தவன் — சீதைக்குத் தூதனுக வந்தவன் — அவளுக்கு அருள் தூதன். தன்னை வென்றி யான் அடியனென்றே கூறிக்கொள்கின்றனன். அது பொருந்தும்.

சீதைக்கு அருள் தூதன். இராகவன் சேவகன், தன் கொள்வினை கூறி இராகவன் சேவகன் எனக் கூறியிருத்தல் சாலும். ஆனுல், அவன் பிறழ்ந்தனன். அஞ்சனை சிறுவன் தன்னைத் தூதன் எனச் சுட்டிய போழ்தும், அரிய சேவகன் ஆகுவன், அன்றி அருந் தூதன் ஆகுவனே?

தமிழர் வளர்த்த சிற்பக்கலை

அ. திருமலைமுத்துசுவாமி, M. A., B. T., M. Litt., D. Lib. Sc.

பண்டைப் பெருமக்கள் வளர்த்த கலைகளுள் சிற்பக் கலையும் ஒன்றாகும். கண்ணால் அள்ளி விழுங்கிய காட்சிப் பொருள்களைச் சிற்பி என்பான், கல்லிலும் மரத்திலும் தந்தத்திலும் பொன்னிலும் எலும்பிலும் சுதையிலும் கடைந்தும் செதுக்கியும், உருவகப்படுத்தியும் வெளிப்படுத்துங்கால் தோன்றுவன சிற்பங்களாகும். சிற்பக்கலைக்குப் பேர்போன நாடுகள் மூன்று; ஒன்று நம் நாடு; மற்றொன்று இரேக்கம்; மூன்றாவது எகிப்து.

சங்ககாலத்திலே வளர்ந்து செழித்த சிற்பங்களைப் பற்றிய குறிப்புக்கள் மட்டும்தான் இன்று கிடைக்கின்றனவே தவிர அவற்றைக் கண்ணால் கண்டு களிக்குமாறு நாம் தவம் இயற்றவில்லை.

'வழுவறு மரனும் மண்ணும் கல்லும்
எழுதிய பாவை........................ ...'
'கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க'

என்பன மணிமேகலை தரும் செய்திகள். எனவே மணிமேகலை காலத்தும் அதற்கு முந்திய சங்ககாலத்தும் கல் முதலிய பொருள்களால் ஆன சிற்பங்களை நம்முன்னோர் செய்திருக்கவேண்டும் என்றால் தவறில்லை.

நாட்டுக்காக உயிர்விட்ட பெருவீரர்கட்குக் கல்லெடுத்தல் நம் பண்டையோர் மரபு. அக்கல்லை 'நடுகல்' எனத் தொகை நூற்கள் குறித்திருக்கின்றன. அக்கல்லிலே பெயரும் பீடும் எழுதி; இறந்த வீரனின் திருஉருவத்தையும்

செதுக்குதல் முந்தையோர் வழக்கம். இவை பற்றிய குறிப்புக்கள் வருமாறு:—

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்த மரபின் பெரும்படை வாழ்த்தல்என்று
இருமூன்று வகையிற் கல்லோடு புணர'
—தோல். புறத். நூ. 60

'.........பெயர் பொறித்து
இனி நட்டனரே கல்லும்' என்பது புறம்.

'ஆடவர்பெயரும் பீடும் எழுதி அதர்தோறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்' என்பது அகப்பாட்டு.

அடுத்து பெரும்பாணாற்றுப் படையிலே ஒரு சிறு குறிப்பு வருகிறது. அஃதாவது, திருமாலினுடைய நூற்றெட்டுத் திருப்பதிகளிலே திருவெஃகாவும் ஒன்றே என்பதை அனைவரும் அறிவர். அந்தத் திருவெஃகாவிலே, மலையின்மீது களிறு ஒன்று படிந்திருந்த பான்மைபோலத் திருமால் பாம்பணைமீது படித்திருந்தான் என்பது ஆற்றுப்படைக் குறிப்பாம்.

''காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்கு
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோன்...''

இந்த இடத்திலே சிலப்பதிகாரக் குறிப்பு ஒன்று நோக்கற்பாலது. மாங்காட்டு மறையோன், திருவேங்கடமலையில் திருமாலினுடைய நின்ற கோலத்தையும், திருவரங்கத்திலே அவன் கிடந்த கோலத்தையும் தன் கண்மணி குளிப்பக் கண்டதாகக் கூறுகிறான். மேலும் அழகர் மலையிலுள்ள திருமாலைப் பற்றிய குறிப்பும் வருகிறது. எனவே அவன் காலத்திலே உருவச் சிற்பங்கள் இருந்திருத்தல் உண்மையே.

"திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்...... செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்" என்பன சிலப்பதிகார வரிகளாகும்.

சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அக்காலத்திருந்த பல்வேறு தெய்வங்களின் கோவில்களைப் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. அவை வருமாறு:-

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும் [இந்திரவிழா...சிலப்]

'நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீருக" [மணிமேகலைஇந்திரா...]

இவற்றிலிருந்து அக்காலத்திலே சிவன் முதலிய தெய்வங்களின் உருவச்சிலைகளும், சதுக்கப்பூதங்களின் சிலைகளும் இருந்திருக்கவேண்டும் என்பது ஒருதலை.

'மண்ணகம் மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டி' யதாகச்

சிலம்பு கூறுவதிலிருந்து, அக்காலத்திலே உருவச்சிற்பங்கள், கையால் தூக்கும் அளவுக்கு எளிதான சிற்பங்களாக இருந்திருக்கவேண்டும் எனலாம்.

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னால் பத்தினிக்கு உருவச்சிலை ஒன்று செங்குட்டுவன் அமைத்தான் என்று சிலப்பதிகாரம் உரைக்கிறது.

'கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
வித்தகர் இயற்றிய விளங்கிய கோலம்......' [சிலம்பு]

இதுகாறும் கூறியதிலிருந்து, சங்ககாலத்திலே கல்லால் ஆன உருவச் சிற்பங்கள் விளங்கின என்பதை அறிரோம். இனித் தொகை நூற்களிலே பாவைகள் பற்றிய குறிப்புக் களைக் காணலாம். மணிமேகலையும் பாவை ஒன்றைக் குறிக் கிறது. கண்டாரைக் காமமிக்கூரச் செய்து வருத்தும் காரி கையைக் கொல்லிப் பாவை என அழைத்தல் பழந்தமிழ்ப் புலவர் மரபு. இஃதோர் அழகிய பாவை; கொல்லிமலையின் மேற்புறத்திலே அமைக்கப்பட்ட பாவை இப்பாவை. இப் பாவை கண்டாரை நகைத்துக் கடிதிற்கொல்லும் தகைத்து எனச் சித்திரமடல் கூறுகிறது.

'கோல்லி'
நிலைபெறு கடவுளாக்கிய
பலர்புகழ் பாவை அன்னநின் னலனே' — அகம்.

'பயங்கெழு பலவின் கோல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை, —நற்றிணை.

'.........................கோல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை எழுதிய
நல்லியற் பாவை...........' — குறுந்தொகை.

எனவே இப்பாவை, சிற்பக்கலையழகு பொருந்திய பாவை எனக் கொள்ளலாம்.

அடுத்த பாவை, அந்திற்பாவை. இதுபற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது. இப்பாவை புகார்நகரில் பூசைக்கென நடப்பட்ட தூணில் அமைக்கப்பட்ட பாவை. இது வருவதுரைக்கும் ஆற்றல் உடைய பாவையாகும்.

'கந்துடை நெடுநிலைக் கடவுள் எழுதிய
அந்திற் பாவை அருளுமாயிடின்'

இன்றைய புகார் நகரில் அழிந்து சிதைந்த சம்பாபதியம் மன் கோவிலிலே சுதையால் ஆன உருவங்கள் காணக்கிடக்

இன்றன. சிலப்பதிகாரம் சுதையால் பாவை செய்வாரை 'மண்ணீட்டாளர்' எனக் குறிக்கின்றது. எனவே சங்க காலத்திலே சுதையால் ஆன சிற்பங்கள் இருந்திருக்கலாம்.

அதுமட்டுமன்று, இன்றுள்ள பழங்கோவில்களிலே உள்ள கலசக்குடுமியின் உருவமும், திருவாரூர்ச் சிவன் கோவில் வாயிற்காவலர் உருவமும் சுதையால் ஆனவையே.

சங்க இலக்கியங்களிலே தேர் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன.

'தச்சச்சிறாஅர் நச்சப்புனைந்த
ஊரா நற்றேர்' —பெரும்பாண்

'தச்சன் செய்த சிறுமா வையம்' —குறுந்தொகை.

இத்தகைய தேர்களிலே மரத்தாலான பாவைகள் அமைத்தல் உண்டு. இவற்றை இன்றைய தேர்களிலே காணலாம். எனவே இத்தகு தேர்களும் பொம்மைகளும் சங்ககாலத்திலே ஓரளவேனும் இருந்திருக்கலாம் எனச் சிறிது எண்ணலாம். இன்றுள்ள சிற்றூர்த் தெய்வங்களான திரௌபதி அர்ச்சுனன், கண்ணன் ஆகியோர் உருவங்கள் பெரும்பாலும் மரத்தாலியன்றனவே.

சிற்பக்கலை (பல்லவர் காலம்)

பல்லவர் காலச் சிற்பக்கலையை அவர்கள் கட்டிய கோவிலில் உள்ள பாறைச் சிற்பங்களும், உருவச் சிற்பங்களும், தூண்களும் நன்கு விளக்கி நிற்கின்றன.

மகேந்திரன் காலத்துச் சிற்பக்கலையை அவன் கட்டிய கற்கோவில்களிலே நன்கு காணலாம்.

[தொடரும்]

மதுரைக் காண்டமும் மன்னவன் சிறப்பும்

பண்டித வித்துவான் மு. உலகநாதன்
விரிவுரையாளர்,
செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

[153-ஆம் பக்கத் தொடர்ச்சி]

மதுரை நகரினையும் மன்னவனது ஆட்சிச் சிறப்பினையும் கட்டுக்காவல் மிகுந்த அந் நகர்க் கோட்டையையும் கண்ட கோவலன் வியப்படைகிறான். அம்மதுரை நகரும் மன்னவனும் 'கல்லென் பேரூர்', 'வலம்படுதானை மன்னவன்' 'பெரும்பெயர் மன்னன்' என்று பின்னரும் தக்கஇடமாகிய கொலைக் களக் காதையில் பேசப்படுகிறார்கள், இத்தகைய காவலையும் தானைச் சிறப்பையும் கடந்து ஒருவன் சிலம்பு திருடினான் என்னும் போதே தண்டனை உறுதிப்படுகிறது. அதன்படி கோவலன் கொல்லப் படுகிறான். அதனை அடிகள் பாண்டியன் செய்ததாக ஏற்றுக் கொள்ளவில்லை. பண்டை ஊழ்வினை உறுத்து வந்தமையால் மண்ணக மடந்தை வான் துயர்கூர கோவலன் வீழ்ந்தனன் என்கிறார். அதனைக் கூறும்போதுகூட அவன் பாண்டியனின் செங்கோல் வளையும்படி வீழ்ந்தான் என்கின்றார். பாண்டியன் கோல் செங்கோல், அது வளையாத செங்கோல். வளையாத செங்கோலும் வளையும்படி ஊழ்வினை வந்துற்றது. எனவே கோல்வளைந்தது. பாண்டியன் தவறினான். இல்லையெனில் நீதி நெறிமுறை வழுவாப் பாண்டியன் கோல் வளைந்திருக்காது, வளைவதற்கு இடமில்லை என்னும் முறையிலேயே அடிகள் கூறுகிறார், எனவே அடிகளின் பரிவுள்ளம் வெளிப்படுகிறது.

கொலைக்களக் காதையின் பின் உள்ள ஆய்ச்சியர் குரவையிலும் பாண்டியன் புகழ் பேசப்படுகிறது. பாண்டியன் கொலைகாரன் என்று தெரிவதற்கு முன் அவனது நீதியைப் பற்றியும் நிலைத்த புகழைப் பற்றியும் புகழ்பாடியது போதாதா? முன் காதையில் நிகழ்ந்த கொலை நிகழ்ச்சி மனத்திருந்து அகல்வதற்கு முன்பு அடுத்த காதையிலேயே பாண்டியனின் பெருமையைப் பாடுகிறார். புகழ்ந்து பேசுகிறார் நீதி தவறியவன் என்று தெரிந்த பின்னர் அவனைப் பழிகாரன், பாவி என்று நிந்தித்தல்லவா பேசவேண்டும்? மாறாக அடிகளின் உள்ளம் சென்றது அவருக்குப் பாண்டியன் மேல் உள்ள பரிவை அல்லவா காட்டுகிறது. பாண்டியனைப் புகழும் போது அவனை ஒருபடி மேலாகவே நீதி தவறிய பின்னும் புகழ்கிறார்.

''கயலெழுதிய இமயநெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந்தண் பொழின்மன்னர்
ஏவல்கேட்பப் பாரரசாண்ட
மாலைவெண் குடைப் பாண்டியன் கோயிலில்
காலை முரசங் கனைகுர லியம்புமாகலின்''

[ஆய்ச்சியர் குரவை 1-6]

இது அவனது முன்னவர் புகழோடு அவன் புகழையும் சேர்த்துப் பேசுகிறது. அதே காதையில் கண்ணனது அழகை வர்ணித்துப்பாடும் ஆய்ச்சியர் இந்திரனின் பூணாரம் பூண்ட கண்ணனைப் பாண்டியனோடு ஒப்பிட்டுப் பேசுகின்றனர். தேவர் கோனின் ஆரத்தைப் பெற்று அணியும் பெருமை கண்ணனை அன்றி வேறு மன்னருக்குக் கிடையாது ஆனால் அப்பெருமையை பாண்டியர் தலைவனாகிய மன்னன் பெற்றிருக்கிறான் என்று பாடுகிறார்கள். அவன் கழுத்தை அணி செய்வன பல. அவற்றில் கோவா ஆரமும்

உண்டு. கோத்த ஆரமும் உண்டு. இது அவனது நிலவளத்தையும் நீர்வளத்தையும் புலப்படுத்தும். கோவா ஆரம் சந்தனம் முதலிய பொதிகை மலைக்கிடைப்பன. கோத்த ஆரம் முத்து, பவளம் முதலிய கடலிடத்துக் கிடைப்பன. நிலத்திலும் நீரிலும் கிடைப்பதைத்தான் ஒரு மன்னன் அணியமுடியும். ஆனல் அவ்விரண்டிற்கும் மேலாக வானத்தில் கிடைப்பதையும் இப் பாண்டியன் பெற்றிருக்கிருன் என்ருல் அது சிறப்புடையதாகவே கருதப்படும். வானத்தில் இருந்து கிடைத்த ஆரமே இந்திரனிடமிருந்து பெற்றது. அப்பெருமை பாண்டியருக்கும் கண்ணனுக்குமே உரியது என்பதனை ஆய்ச்சியர் குரவையில் கூறுகிருர்.

''கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணுரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணுரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்''

(ஆய்சியர்: உள்வரி வாழ்த்து 1-4)

அதனை இப்பாண்டியர் எவ்வாறு பெற்றனர். இடிப்படைத் தலைவனகிய இந்திரனேடு மாறுகொண்டு அவனது முடி இடத்தை உடைத்துப் பெற்றனர். அத்தகைய தொடி பொருந்திய தோளையுடைய பாண்டியனின் முரசமானது பகைவரும் அஞ்சும் வண்ணம் நாள்தோறும் முழங்கி அப்பாண்டியற்கு வெற்றியைத் தேடித்தரட்டும் என்றும் முடிவில் பாடி முடிக்கின்றனர்.

''மருள வைகல் வைகல் மாறட்டு
வெற்றி விளைப்பது மன்னே கொற்றத்து
இடிப்படை வானவன் முடித்தலை யுடைத்த
தொடிதோட் டென்னவன் கடிப்பிகு முரசே''

(ஆய்சியர்: படர்க்கைப்பரவல் 3)

இவற்றையெல்லாம் பார்க்கும்போது பாண்டியன் மீதும் அவனது முன்னவர்களின் வெற்றி வீரத்தின் மீதும் அவர்தம் தலைநகராகிய மதுரையின் மீதும் அடிகளுக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தமை புலப்படுகிறது.

''முறையில்லாத அரசன்தன் ஊரிருந்து வாழும் நிறையுடைப் பத்தினிப் பெண்களே'' என்று ஊர்சூழ் வரியில் கண்ணகி அரற்றித் திரிந்தபோதும் அம்மக்கள் எல்லோரும் மயங்கிக் களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி வளையாத செங்கோல் வளைந்தது எதனாலோ என்றும் மன்னர்க்கு மன்னனாகவும் மதிக்குடை வாள்வேந்தனாகவும் இருந்த தென்னவனது கொற்றம் சிதைந்தது எதனாலோ என்றும் மண்குளிரச் செய்யும் மறவேல் நெடுந்தகையாம் மன்னவனின் தண்குடையானது வெம்மையை விளைத்தது என்ன காரணம் பற்றியோ என்றும் அவ்வூர் மக்கள் திகைக்கின்றனர். இதனை,

''மல்லல் மதுரையா ரெல்லாரும் தாமயங்கிக்
களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்ததிது வென்கோல்
மன்னர் மன்னன் மதிக்குடை வாள்வேந்தன்
தென்னவன் கோற்றம் சிதைந்த திதுவென்கோல்
மண்குளிரச் செய்யும் மறவேல் நெடுந்தகை
தண்குடை வெம்மை விளைத்த திதுவென்கோல்''

(ஊர்சூழ் 15-22)

என்று கூறுகிறார். மக்கள் புகழ மன்னவனின் நீதி இருந்திருக்கிறது. மன்னவனின் பெருமையை அந்நாட்டு மக்களின் வாயிலாகவே தெரிந்துகொள்ள முடியும். அதனை இங்கே மதுரை மக்கள் மயங்குவதின் மூலம் காட்டிவிட்டார்.

புகழ்ந்துகொண்டே வந்த அடிகளுக்குக் காப்பியச் சுவை குன்றும் என்று தோன்றியதோ என்னவோ. கண்ணகியை அதற்குப் பயன்படுத்திக்கொண்டார். வேறு பாத்திரத்தைக்கொண்டு மதுரையையோ பாண்டியனையோ பழிக்க முற்படவில்லை. கோபாவேசத்தில் நிற்கும் கண்ணகியையே பேசவைக்கிருர். 'மன்னுறு துயர் செய்த மறவினையறியாதோன்' என்றும் 'பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் தவறிழைத்தான்'என்றும் 'மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைத்தான்' என்றும் இதற்கெல்லாம் காரணம் 'உன்னுடைய ஊழ்வினை' என்றும் இவ்வூரவர் என்னை உரையாரோ என அழுது புலம்புகின்ருள். அப்போது அவளது சீற்றம் இந்நாட்டில் கற்புடைப் பெண்களும், சான்ருேரும் தெய்வமும் உண்டோ எனக் கேட்கிறது. அப்போதுதான் முதல் முதலில் மதுரை 'வைவாளில் தப்பிய மன்னவன் கூடல்' என்று பழிக்கப்படுகிறது. அதே போன்று மன்னவனும் 'தீவேந்தன் தனைக்கண்டித் திறங்கேட்பல்' என்றும் பழிக்காளாக்கப்படுகிருன். இதுகூட இளங்கோவின் உள்ளக்கிடைக்கையாக வாராது கண்ணகியின் வாயிலாகவே வெளிவந்து காப்பியத்தைச் சிறப்புறச் செய்கிறது ஏனெனில் அவள் வைவாளில் தப்பிய மன்னவன் கூடல் என்கின்ருள். ஆனல் அடிகள், கண்ணகி நீதி கேட்கச் சென்ற அப்பாண்டியனின் அரண்மனையை 'செழுங்கோயில் என்கின்ருர். ஊர்சூழ்வரி கடைசி வரியில் அடிகளின் உள்ளமாக "சென்ருள் அரசன் செழுங்கோயில் வாயில் முன்" என்ற வரிகளே பளிச்சிடுகிறது. திட்டுவதைக்கூடத் தான் திட்டாமல் கண்ணகி மூலமே அடிகள் செய்திருப்பது பாராட்டற்பாலது.

சினத்தின் செந்தீயாய் கண்ணகி வருகிருள். பாண்டியனின் செங்கோலும் வெண்குடையும் நிலத்துவிழும்படி

பல உற்பாதங்கள் நிகழ்கின்றன. அதனைக் கண்ட பாண்டியன் தேவி அதனை அரசனுக்கு உணர்த்த எண்ணுகிறாள் பலவகைச் சிறப்புக்களோடு, பலவகை ஏவலரும் அவளைப் பின் தொடர அவள் வருகின்றாள். பலரும் அவளை 'ஈண்டுநீர் வையங்காக்கும் பாண்டியன் பெருந்தேவி வாழ்கென' வாழ்த்துகின்றனர். அவள் வந்து தான் கண்ட தீக்கனவையும் மன்னனிடம் கூறுகின்றாள். அதனைக் கேட்கும் அரிமான் ஏந்திய அமளிமிசையின் மீது மன்னவன் கலங்காது அமர்ந்துள்ளான். அவன் அமர்ந்துள்ளது எவ்வாறு உள்ளது? இளங்கோவின் உள்ளம் புலப்படுகிறது 'திருவீழ் மார்பின் தென்னர் கோவே' என்றுரைக்கிறார். 'திருவீழ்' என்பதற்குத் 'திருமகள் உரைகின்ற மார்பினை உடையவன்' என்று பொருள். எனினும் 'திருமகள் அம்மார்பை விட்டு நீங்குகின்ற' என்றும் பொருள் படும்படி அச்சொல் இங்கோவையும் அறியாமல் விழுந்துவிட்டது வியப்புக் குரியதே.

வாயிலில் காவல் காப்போன் நிற்கிறான். கண்ணகி அங்கே வந்து நின்றாள். அவன் தடுக்கவில்லை. எனினும் வாயிலோயே! வாயிலோயே! அறிவு நீங்கியும் அறநினைவற்றும் இறைமுறை பிழைத்த மன்னனது வாயிலோயே! எனச் சீறுகிறாள். தான் வந்துள்ளதை அறிவிக்கச் சொல்லுகிறாள்.

"வாயிலோன் வாழியெங் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பின் தலைவ வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி"

எனப் புகழ்ந்து கண்ணகி வந்துள்ளதை அறிவிக்கச் செய்கிறார்.

(தொடரும்)

மதுரைத் தமிழ்ச் சங்கம்

புலவர் தேர்வு முடிவுகள்-1964

நுழைவுத் தேர்வு

முதல் தகுதி:—8, 11, 26, 44, 47, 48, 70, 85, 93, 101, 103, 114, 152, 225, 231 251.

இரண்டாம் தகுதி: -6, 9, 12, 13, 17, 19, 20, 39, 40, 43, 45, 52 to 54, 72, 81, 87 to 92, 95 to 97, 102, 105, 108, 110, 115, 116, 120, 121, 136, 138, 140, 143, 144, 146, 148, 150, 154, 156, 157, 163, 172, 209, 226, 229, 230, 232, 233, 236, 238, 239, 246, 250, 254, 255, 257, 262, 266, 271.

மூன்றும் தகுதி:—7, 14 to 16, 18, 21, 27, 29, 30, 37, 41, 42, 49, 50, 55, 56, 66, 68, 71, 82, 84, 86, 98, 99, 109, 117 to 119, 128, 137, 139, 142, 147, 149, 151, 153, 155, 158, 159, 165, 169, 170, 173, 174, 177, 181, 183, 189, 191, 192, 194, 208, 213, 222, 223, 227, 228, 235, 237, 240, 241, 242, 243, 247, 249, 252, 253, 256, 265, 267.

இளம்புலவர்

முதல் தகுதி:—181.

இரண்டாம் தகுதி:—6, 42, 47, 67, 158, 164, 169, 177, 182, 183, 186, 187, 190.

மூன்றும் தகுதி:—1, 3 to 5, 7, 9, 10, 14, 15, 17, 18, 21 to 26, 31 to 33, 35 to 38, 40, 43 to 45, 48, 50, 51, 53, 60, 61, 68, 69, 71 to 75, 78, 84, 85, 87, 88, 92 to 95, 98, 103, 104, 106, 115, 121 to 123, 126 128 to 131, 134, 138 to 144, 146 to 149, 154, 159, 162, 163, 168, 173, 176, 178, 179, 184, 185, 188, 192, 53-B, 174-A.

புலவர்

முதல் தகுதி:—இல்லை.

இரண்டாம் தகுதி:—136, 171 to 177, 191, 192, 195, 197, 198.

மூன்றும் தகுதி:—2, 4 to 6, 8, 9, 11 to 16, 18, 19, 24 to 28, 32 to 35, 37, 38, 40 to 44, 47, 48, 51, 52, 56, 58 to 60, 62, 66, 68, 71 to 76, 76-B to 76-I 76 K-79, 80, 84, 88, 90 to 92, 94 to 99, 104, 105, 108, 112, 115, 121, 122, 127, 131, 135, 138, 140, 142, 144, 147 to 149, 156, 161 to 163, 165, 168, 170, 181, 185, 188 to 190, 194, 196, 199 to 202.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ	ப
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக் கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	8	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சன தீபிகை	—	0	12	0
18.	இயற்கைப் பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	8	0
21.	சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பக மூலமும் உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகை திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக் கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமான சங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6
42.	அகராதி நிகண்டு	—	0	12
43.	மேகவிடு தூது	—	0	2
44.	திருக்குற்றாலமாலை	—	0	2
45.	தண்டலையார் சதகம்	—	0	4
46.	இராமோதந்தம்	—	0	3
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6
49.	கூடற்புராணம்	—	0	10
50.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6
51.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4
52.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12
53.	பாப்பாவினம்	—	0	10
54.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5
55.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3
56.	கடம்பர் கோயில் உலா	—	0	6
57.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6
58.	கலைசைக்கோவை	—	0	12
59.	பெருந்தொகை	—	5	0
60.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5
61.	சிராமலைக்கோவை	—	0	12
62.	மத்யவியாயோகம்	—	0	2
63.	அமிர்தரஞ்ஜனி	—	0	2
64.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8
65.	திருச்சிறுபுலியூருலா	—	0	12
66.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10
67.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 59 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7. 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 விதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்பு புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு விதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.